**மேல் மாகாண சபை - 2021 ஆண்டு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மேல் மாகாண சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பறிக்கை 2022 திசெம்பர் 14 ஆம் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஒக்தோபர் 31 ஆம் திகதி வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும் அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் முன் வைப்பதற்காக ஆளுநரிடமும் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மேல் மாகாண சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண திறைசேரி அச்சீட்டு பதிவின் பிரகாரம் மேல் மாகாண, உள்ளூராட்சி திணைக்களத்திற்கு 2021 ஆம் ஆண்டின் கட்டுநிதிக் கொடுப்பனவு ரூபா 17,863,695,731 ஆன போதிலும் உள்ளூராட்சி திணைக்களத்தின் நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் கட்டுநிதி பெறுவனவுகள் ரூபா 17,760,927,881 ஆனமையால் ரூபா 102,767,850 ஆன வேறுபாடு ஒன்று காணப்பட்டது. | 2022 ஆம் ஆண்டு முதல் கட்டுநிதி பெறுவனவுகளுக்கு பேரேட்டு பதிவுகளின் பெறுமதிகளும் உள்ளடக்கப்பட்டு செயலாற்றல் கூற்றினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | கணக்கு மீதிகளை இணக்கம் செய்து சரியான மீதிகளை கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மேல் | கடன் மீதிகளை திருத்துவதற்கு | கணக்கு மீதிகளை இணக்கம் செய்து |

| | | | |
|---|---|---|---|
| | மாகாண விவசாய திணைக்களம், பொறியியல் பணியகம் மற்றும் உள்ளூராட்சி திணைக்களம் ஆகிய 03 நிறுவனங்களின் மாகாண சபை உத்தியோகத்தர்களின் முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 175,778,114 ஆன போதிலும் அத்திகதியில் உள்ளபடியாக அந்த நிறுவனங்களுக்கு தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை ரூபா 170,231,084 ஆனமையால் ரூபா 5,547,030 ஆன வேறுபாடொன்று நிலவியது. | நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | சரியான மீதிகளை கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மேல் மாகாண விவசாய திணைக்களத்தின் புத்தகத்தின் பிரகாரம் கணக்கு இலக்கம் 6001, 6002 மற்றும் 6003 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்குகளின் கூட்டுத் தொகை ரூபா 7,167,584 ஆன போதிலும் அத்திகதியில் உள்ளபடியாக மாகாண திறைசேரி கணனி பதிவுகளின் பிரகாரம் கூட்டுத்தொகை ரூபா 6,949,087 ஆனமையால் மீதிகளுக்கிடையே ரூபா 218,497 ஆன வேறுபாடொன்று நிலவியது. | மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு தற்போது மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. | கணக்கு மீதிகளை இணக்கம் செய்து சரியான மீதிகளை கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | கொழும்பு, பாலிந்தநுவர, மத்துகம, திம்பிரிகஸ்யாய, களணி மற்றும் மீரிகம ஆகிய பிரதேச செயலக அலுவலகங்கள் 06 இன் கணக்குகளின் பிரகாரம் (மாகாண சபை நிதியேற்பாடுகளுக்குரிய) பொது வைப்பு மீதி ரூபா 30,116,831 ஆகக் காணப்பட்டதுடன் மாகாண நிதியக் கணக்கின் பிரகாரம் அந்த 06 அலுவலகங்களின் பொது வைப்பு மீதி ரூபா 30,744,229 ஆனமையால் ரூபா 627,398 ஆன வேறுபாடொன்று நிலவியது. | இந்த வேறுபாடுகளை இனங்கண்டு இணக்கம் செய்யப்பட்டவாறு உள்ளது. | கணக்கு மீதிகளை இணக்கம் செய்து சரியான மீதிகளை கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டின் ஏனைய செலவின தலைப்புக்களினால் மேல் மாகாண, உள்ளூராட்சி திணைக்களத்தின் செலவினத் தலைப்பிற்கு வரவு வைக்கப்பட்டிருந்த ரூபா 4,469,164 ஆன செலவினங்கள் திணைக்களத்தினால் கணக்கு வைக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் ஏனைய செலவின தலைப்புக்களினால் மேற்கொள்ளப்படும் வரவு வைத்தல்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | ஏனைய செலவினத் தலைப்புக்களினால் திணைக்களத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள செலவினங்கள் திணைக்கள புத்தகத்தில் கணக்கு வைக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | மேல் மாகாணம், உள்ளூராட்சி திணைக்களத்தின் 2021 ஆம் ஆண்டின் நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கொடுப்பனவு ரூபா 18,463,407 ஆன போதிலும் மாகாண சபை உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் பிரகாரம் அது ரூபா 17,944,536 ஆனமையால் மீதிகளுக்கிடையே ரூபா 518,871 ஆன வேறுபாடு நிலவியது. | எதிர்காலத்தில் கணக்கு பொழிப்புக்களின் மூலம் திணைக்களங்களுக் கிடையே மேற்கொள்ளப்பட்டுள்ள வரவு வைத்தல்களும் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | கணக்கு மீதிகளை இணக்கம் செய்து கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலும் வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா) மற்றும் தகவல் தொழில்நுட்ப வள அபிவிருத்தி அதிகார சபை (மே.மா) கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 528,985,774 பெறுமதியான நிதியல்லாத சொத்துக்களும் ரூபா 28,998,824 பெறுமதியான தகவல் தொழில்நுட்ப உபகரணங்களும் பொறியியல் பணியகத்தின் சொத்துக்களாக அல்லது அவற்றை மாற்றுவதன் மூலம் வழங்கப்பட்ட நிறுவனத்தினால் அல்லது மீளாய்வாண்டின் இறுதியில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து நிதியல்லாத சொத்துக்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணங்களை கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | மேல் மாகாண பொறியியல் பணியகத்தினதும் நீர்பாசனத் திணைக்களத்தினதும் நிதிக் கூற்றுக்களின் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக தீர்ப்பனவு செய்யப்படாத கட்டுநிதி மீதிகளின் | எதிர்காலத்தில் ஒதுக்கீட்டுக் கணக்கினை தயாரிக்கும் போது இவ்வாறான கொடுக்கல் வாங்கல்களில் சரியாக பதிவு செய்வதற்கு உரிய அறிவுரைகள் | கணக்கு மீதிகளை ஒப்பிட்டு சரியான மீதிகளை கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தொகை ரூபா27,252,674 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அத்திகதியில் உள்ளபடியாக மாகாண நிதியக் கணக்கில் அந்த மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 20,560,679 ஆனமையால் ரூபா 6,691,995 ஆன வேறுபாடொன்று நிலவியது. | வழங்கப்பட்டது. | |
| (ஐ) | மேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் 20.03.02.24 ஆம் இலக்க வருமானக் கணக்கின் பிரகாரம் மீளாய்வாண்டின் வருமான சேகரிப்பு ரூபா 6,111,191 ஆன போதிலும் மாகாண திறைசேரி கணனி அச்சீட்டின் பிரகாரம் அது ரூபா 5,877,191 ஆனமையால் ரூபா 234,000 ஆன வேறுபாடொன்று நிலவியது. | ரூபா 234,000 பதிவு செய்யப்படாமையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | கணக்கு மீதிகளை ஒப்பிட்டு சரியான மீதிகளை கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மேல் மாகாண நிதியக் கணக்கின் பிரகாரம் நிதியல்லாத சொத்துக்களின் கூட்டுத்தொகை ரூபா 18,457,896,704 ஆன போதிலும் அமைச்சு / திணைக்களம் கணக்குகளின் பிரகாரம் அந்த மொத்தச் சொத்துக்களின் கூட்டுத்தொகை ரூபா 21,988,970,384 ஆனமையால் ரூபா 3,531,073,680 ஆன வேறுபாடொன்று நிலவியது. | அனைத்து சொத்துக்களையும் கணக்கு வைத்தல் 2022 ஆம் ஆண்டில் முழுமைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றமை. | கணக்கு மீதிகளை ஒப்பிட்டு சரியான மீதிகளை கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஓ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மேல் மாகாண நிதியக் கணக்கின் பிரகாரம் சொத்துக்களை சுவீகரிப்பு பெறுமதியானது ரூபா 1,863,453,587 மற்றும் சொத்துக்களை அகற்றுதல் மற்றும் மாற்றல் பெறுமதி ரூபா 141,052,838 ஆன போதிலும் அமைச்சு / திணைக்கள கணக்கின் பிரகாரம் அந்த பெறுமதி முறையே ரூபா 1,869,437,828 மற்றும் ரூபா 139,545,535 ஆனமையால் ரூபா 5,984,241 ஆன மற்றும் ரூபா 1,507,303 ஆன வேறுபாடு நிலவியது. | 2022 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு எதிர்பார்க்கின்றமை. | கணக்கு மீதிகளை ஒப்பிட்டு சரியான மீதிகளை கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஔ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மேல் | எதிர்காலத்தில் கணக்கு வைக்கப்படும் என்பதை | அனைத்து நிதியல்லாத |

| | | |
|---|---|---|
| மாகாண சபை செயலகத்தின் ரூபா 27,250,000 பெறுமதியான ஜீப் வண்டியொன்றும் உள்ளூராட்சி திணைக்களத்தின் 15,400,000 பெறுமதியான 02 வாகனங்கள் மற்றும் மாகாண சுற்றுலா சபையின் ரூபா 166,000,000 பெறுமதியான ஏற்றுக் கால நீர்ப்பூங்கா அதன் நிறுவனத்தினால் தமது நிதிக்கூற்றுக்களிலோ அல்லது மாகாண சபை நிதியத்தின் கணக்குகளிலோ கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | தெரிவித்துக் கொள்கின்றேன். | சொத்துக்களும் கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மேல் மாகாண சபையின வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- வேண்டுமென்றே தவிர்ப்புச் செய்தல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பு செய்தல் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக முகாமையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.5.1 தலைப்பு 100 – ஆளுநர்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) ஆளுனர் அலுவலகத்தின் கீழ் திட்ட கண்காணிப்பு அலகொன்றினை நிறுவி அதற்காக மீளாய்வாண்டில் ரூபா 1,369,000 செலவிடப்பட்டு | எதிர்காலத்தில் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் என்பது. | தேவைப்பாட்டினை சரியாக இனங்கண்டு கொள்வனவு செய்வதற்கும் |

| | | | |
|---|---|---|---|
| | 05 கணனி இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அலகிற்கு மூன்று உத்தியோகத்தர்கள் மாத்திரம் இணைப்புச் செய்யப்பட்டிருந்த அடிப்படையில் எஞ்சிய 02 கணனி இயந்திரங்கள் 2022 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது. | | கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களை பயன்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2020 ஒக்தோபர் 22 ஆந் திகதி இடம்பெற்றிருந்த வாகன விபத்து சாரதியின் கவனயீனத்தின் அடிப்படையில் இடம்பெற்ற விபத்தென்று உறுதி செய்யப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பில் தொடர்ந்தும் அறவிடுவதற்குள்ள ரூபா 281,584 ஆன மீதி குறித்த சாரதியிடமிருந்து அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | நட்டத்தை பொறுப்புக்கூற வேண்டியவர் களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 தலைப்பு 101 – சபைச் செயலாளர் அலுவலகம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதிய பீஎஸ்/சீஎஸ்ஏ/11-18 ஆம் இலக்க சனாதிபதி செயலகத்தின் அரச செலவின சுற்றறிக்கை பிரகாரம் மாகாண சபை தலைவர்களின் அலுவலகங்களில் சேவையில் ஈடுபடும் உதவி பதவியணியின் இரு சாரதிகள் உள்ளடங்கலாக 10 பேர் காணப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக மேல் மாகாண சபையின் தலைவரின் உதவிப் பதவியணியின் மூன்று சாரதிகள் உள்ளடங்கலாக 11 பேர் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் | தனிப்பட்ட செயலாளருக்காக சாரதியொருவர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார். | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டியதுடன் சுற்றறிக்கைக்கு முரணாக செயற்படுவதற்கு விசேட அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேலதிகமாக ஈடுபடுத்தப்பட்ட சாரதி பதவியொன்றுக்காக 2019 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலும் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,343,912 சபையின் செயலகத்தினால் செலுத்தப்பட்டுள்ளது. | | |
| (ஆ) | 2018 யூலை 18 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் (1) பந்திக்கமைய சபையின் செயலகத்தினால் 2004 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் உத்தியோகத்தர்களுக்கு சம்பளத்திற்கு மேலதிகமாக செலுத்தப்படும் 1/3 படி தொடர்பில் தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் பொதுத்திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்பது மிகத் தெளிவாக குறிப்பிடப் பட்டிருந்த போதிலும் அவ்வாறு முறையான அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளாது 2019 மே முதல் 2022 யூன் வரையிலுமான காலப்பகுதியினுள் ரூபா 11,019,607 ஆன தொகை 30 உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர்களுக்கு படிகள் வழங்கப்பட்டது. | உத்தியோகத்தர் களுக்கு சம்பளத்திற்கு மேலதிகமாக படிகளை செலுத்துவதற்கு முன்னர் தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் மற்றும் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் திறைசேரி அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | | | |
| (i) | 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதிய பீஎஸ்/சீஎஸ்ஏ/11-18 ஆம் இலக்க சனாதிபதி செயலக அரச செலவின முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் மாகாண சபையின் தலைவர்களுக்கு வீட்டு வாடகை படியொன்றினை செலுத்துவதற்கு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராத போது 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக மாதமொன்றிற்கு ரூபா 50,000 படியாக ரூபா 1,200,000 | தலைவருக்கு சம்பளம் / படிகள் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல் மேற்கொள்ளப்பட்டது. | குறித்த சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் சுற்றறிக்கை யிலிருந்து விலகி படிகளை செலுத்துவதற்கு விசேட அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தொகையான வீட்டு வாடகைப் படியும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்படாத உபசரணை படிகளுமாக மாதமொன்றிற்கு ரூபா 2,000 படி 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக 48,000 தொகை மாகாண சபையின் தலைவர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ii) | மேல் மாகாண சபையின் உத்தியோகபூர்வ காலம் 2019 ஏப்ரல் மாதத்தில் நிறைவடைந்த பின்னர் சபை செயலற்றுக் காணப்பட்ட 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தலைவரின் பிரத்தியேக செயலாளருக்கு மேலதிக நேர படிகளாக மாதாந்த சம்பளத்திற்கு சேர்க்கப்பட்டிருந்த ரூபா 2,500 ஆன படிகளுக்காக ரூபா 60,000 தொகையும் உள்ளடங்கலாக ஏனைய பதவியணிக்கு மேலதிக நேரப் படிகளாக ரூபா 401,618 போக்குவரத்து செலவினங்களுக்காக ரூபா 472,850 எனுமாறு ரூபா 934,468 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தலைவருக்கு மற்றும் பதவியணிக்கு சம்பளம் / படிகள் மற்றும் ஏனைய வசதிகள் வழங்கப்படுகின்றன. | மாகாண சபையின் உத்தியோகபூர்வ காலம் நிறைவடைந்து புதிய மாகாண சபைக்கு தெரிவு செய்யப்படும் வகையில் பெயரளவு பதவியாக நியமனத்தின் அடிப்படையில் குறித்த சுற்றறிக்கை வெளியிடப் பட்டிருந்த சனாதிபதி செயலகத்திடம் வினவி கொடுப்பனவுகள் தொடர்பில் தெளிவுபடுத்தல் வேண்டும். |
| (iii) | 2009 யூன் 17 ஆந் திகதிய 09/2009(I) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 2(I) பிரிவின் பிரகாரம் அமைச்சின் பதவியணி, அமைச்சின் செயலாளர்கள், நிறுவனத் தலைவர்கள் உள்ளடங்கலாக அனைத்து அரச ஊழியர்களும் சேவை நிலையத்திற்கு வருகை மற்றும் வெளிச்செல்லல் கைவிரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மாகாண சபையின் தலைவரின் தனிப்பட்ட பதவியணியின் 11 அங்கத்தவர்கள் அவ்வாறு | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கைவிரல் அடையாள இயந்திரத்தினை பயன்படுத்தியிருக்கவில்லை. | | |
| (ஈ) | 2013 ஆம் ஆண்டு பதவியணி மீளாய்வின் பின்னர் சபையின் செயலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் அறிக்கையின் பிரகாரம் சட்ட உத்தியோகத்தர் மற்றும் மொழி பெயரப்பாளர் பதவிகள் அகற்றப்பட்டிருந்த போதிலும் சட்ட மற்றும் மொழிபெயர்ப்பு அலகுகளில் இணைப்புச் செய்யப்பட்டிருந்த சட்ட மற்றும் மொழிபெயர்ப்பு உத்தியோகத்தர்கள் இருவர் சபையின் செயலகத்திற்கு தற்காலிகமாக இணைப்புச் செய்யப்பட்டு அந்த நிறுவனத்தின் வரப்பிரசாதங்கள் மற்றும் படிகளாக 2019 ஆம் ஆண்டு முதல் 2022 யூன் வரையிலும் ¼ படிகளாக ரூபா 1,224,764 ஆன தொகை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பதவியணி மீளாய்வின் ஊடாக அந்த பதவி இந்த அலுவலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிலிருந்து அகற்றப்பட்டு பிரதான செயலகத்தின் சட்ட அலகு மற்றும் மொழி பெயர்ப்பு அலகிற்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. | சபை செயலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உள்ளடக்கப்படாத பதவிகளுக்கு படிகள் செலுத்தப்படக் கூடாது. |
| (உ) | இலங்கை பாராளுமன்றத்திற்கு அல்லது அரசாங்கத்திற்குரிய அமைச்சொன்றின் அல்லது நிறுவனமொன்றின் தலையீடு அல்லது கோரிக்கை இன்றி மேல் மாகாணத்திற்கு நேரடியாக தொடர்பில்லாத மாவட்ட இணைப்புக் குழுவின் தலைவருக்கு அவரது தனிப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் ரூபா 27,250,000 பெறுமதியான பிராடோ ஜீப் வண்டியொன்று மாகாண அளுனரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிறுவனத்தின் வளங்களை உச்சமாக ஆக்கபூர்வமாகவும் மற்றும் செயற்திறனுடனும் நிறுவனத்தின் நோக்கங்களுக்காக மாத்திரம் பயன்படுத்த வேண்டியதுடன் முறையான அங்கீகாரமின்றி வெளிவாரி தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களை துரிதமாக பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 தலைப்பு 102 – மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் 2021 ஆம் ஆண்டின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கமைய மீளாய்வாண்டினுள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள வினைத்திறமை காண் தடைப்பரீட்சை, தகுதிகாண் பரீட்சை திணைக்களப் பரீட்சைகள் மற்றும் ஆட்சேர்க்கும் திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டி பரீட்சைகளின் கூட்டுத்தொகை 150 ஆன போதிலும் 2021 ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்டிருந்த பரீட்சைகள் மற்றும் விசாரணைகளின் எண்ணிக்கை 48 மாத்திரம் ஆகும். | நாட்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமையின் மத்தியில் தடைகாண் பரீட்சை, தகுதிகாண் பரீட்சை, திணைக்களப் பரீட்சைகள் மற்றும் போட்டிப் பரீட்சைகளை நடாத்துதல் மட்டுப்படுத்தப்பட்டமை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கமைய நிறுவனம் செயற்பட வேண்டியதுடன் அவ்வாறு இல்லாதுவிடின் செயல்நடவடிக்கை திட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.4 தலைப்பு 103 – கூட்டுறவு சேவைகள் ஆணைக்குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்குரிய ஆணைக்குழுவிற்கு கிடைக்கப் பெற்ற மேன்முறையீடுகள் மற்றும் முறைப்பாடுகள் 77 இல் 41 மாத்திரம் தீர்க்கப்பட்டிருந்தது. | மேன்முறையீடுகள் மற்றும் முறைப்பாடுகளுக்கு உரிய ஆண்டுகளில் தீர்வு வழங்க முடியாது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | மேன்முறையீடுகள் மற்றும் முறைப்பாடுகளை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.5 தலைப்பு - 104 - உள்ளூராட்சி, பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மற்றும் எரிசக்தி, சுற்றாடல் அலுவல்கள், நீர் வழங்கல் மற்றும் வடிகால் மற்றும் சுற்றுலா அலுவல்கள் அமைச்சு (மேல் மாகாணம்)

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மாகாண நிதி விதி 54.5, 54.6 இன் பிரகாரம் ஏதேனும் ஒரு விபத்து தொடர்பில் முழுமையான அறிக்கையொன்றினை சமர்ப்பிப்பதற்கு 07 நாட்களை விட அதிக நாட்கள் எடுக்குமென எதிர்பார்த்தால் உடனடியாக பூர்வாங்க | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் இடம்பெறாது இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | மாகாண நிதி விதிக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| அறிக்கையும் அழிவு நட்டங்கள் இடம்பெற்ற திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள் முழுமையான அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மேல் மாகாண உள்ளூராட்சி அமைச்சின் 03 வாகன விபத்துக்கள் இடம்பெற்று பூர்வாங்க அறிக்கை சமர்ப்பிப்பதற்கு 10 முதல் 15 மாதங்களுக்கு இடைப்பட்ட காலமும் முழுமையான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு 10 மாதங்களும் 02 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமும் கடந்திருந்தது. | | |
| (ஆ) பிரதம அமைச்சின் உத்தியோகபூர்வ இல்லம் 2021 சனவரி 25 ஆந் திகதி வாடகை அடிப்படையில் சுற்றுலா அமைச்சு (மத்திய அரசு) இற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் ரூபா 2,223,000 ஆன மாகாண சபை நிதியேற்பாடுகளை செலவிட்டு சூரியஒளி வலுச்சக்தி கட்டமைப்பொன்று பொருத்தப்பட்டிருந்தது. நவீன வசதிகளுடனான கொழும்பு 07 இல் அமைந்திருந்த அந்த உத்தியோகபூர்வ இல்லத்திற்காக அரசின் மதிப்பீடொன்றினை பெற்றுக் கொள்ளாது மாதமொன்றிற்கு ரூபா 16,000 எனும் மிகவும் குறைவான வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | உத்தியோகபூர்வ இல்லம் உள்ளூராட்சி சபையின் தற்போதைய பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத போதிலும் நீண்டகால முதலீடாக கருதி சூரியவலு கட்டமைப்பினை பொருத்தியிருந்தமையை தெரிவித்துக் கொள்கின்றேன். | உத்தியோகபூர்வ இல்லத்தினை வெளிவாரி தரப்பினருக்கு வாடகை அடிப்படையில் வழங்கும் போது அரச மதிப்பீடொன்றினை பெற்று அதற்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.5.1 மேல் மாகாண பொருளாதார மேம்பாட்டு பணியகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மேல் மாகாண பொருளாதார மேம்படுத்தல் பணியகத்தின் விஞ்ஞாபனத்தின் 19(1) பிரிவிற்கமைய பணியகத்தின் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் | நிதி விதியினை தயாரித்து நிறைவு செய்துள்ளதுடன் பணிப்பாளர் சபையின் கூட்டத்தில் சமர்ப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | விஞ்ஞாபனத்திற் கமைய தாமதிக்காது விதிகளை தயாரித்து அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமுல்படுத்துவதற்கும் மற்றும் கட்டணங்களை அறவிடுவதற்கும் விதிகளை தயாரித்து ஆளுனரிடமிருந்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறான விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2020 திசெம்பர் 02 ஆந் திகதி மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 20,000,000 தொகை மேல் மாகாணம், உள்ளூராட்சி அமைச்சினால் பணியகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. பணியகத்தினால் இந்த தொகை குறித்த பணிகளுக்கு செலவிடுவதற்கு முன்னர் அமைச்சின் அங்கீகாரமின்றி அழைப்பு வைப்புக்களில் (Call Deposit) முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2022 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் அந்த தொகையில் ரூபா 9,338,752 அழைப்பு வைப்புக்களிலேயே காணப்பட்டது. | அந்த காசாக மேற்கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட பணிகளுக்காக பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பித்திராததுடன் இந்த தொகையை அழைப்பு வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டது. | மீண்டெழும் செலவினங்களுக்கு வழங்கிய தொகையை குறித்த பணிகளுக்கு பயன்படுத்தி அதன் மூலம் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மாகாண திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளாது பணியகத்தின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் 2018 முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலும் ''வெஸ்பிறோ'' பாதுகாப்பு பிரிவு செயற்திட்டத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் உள்ளடங்கலாக 04 உத்தியோகத்தர்களுக்கு செயற்திட்ட கண்காணிப்பு படிகளாக ரூபா 2,988,690 செலுத்தப்பட்டிருந்தது. | மேல் மாகாண சபை 2010 இன் 09 ஆம் இலக்க பொருளாதார மேம்படுத்தல் பணியக விஞ்ஞாபனத்தின் (15ஈ) சராசரி அதிகாரங்களின் கீழ் பணியகத்தின் ஊழியர்களின் சம்பளங்களை செலுத்துவதற்காக பணிப்பாளர் சபைக்கு அதிகாரம் சாட்டப்பட்டுள்ளது. | படிகளை செலுத்துவதற்கு உரிய அங்கீகாரங்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | ''வெஸ்பிறோ'' அலுவலக வளாகத்தை அண்மிய சுகாதார சேவைகள் செயற்திட்டத்தின் | மேல் மாகாண சபையின் 2010 இன் 09 ஆம் இலக்க பொருளாதார மேம்படுத்தல் பணியக | படிகளை செலுத்துவதற்கு உரிய அங்கீகாரங்களை |

| | | | |
|---|---|---|---|
| | சேவைகளை வழங்குவதற்காக செயற்திட்ட படியாக 2018 முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலும் ரூபா 5,380,400 தொகை பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் உள்ளடங்கலாக 17 பணியக உத்தியோகத்தர்களுக்கு மாகாண திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளாது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. | விஞ்ஞாபனத்தின் (15ஈ) பொதுவான அதிகாரங்களின் கீழ் பணியக ஊழியர்களின் வேதனங்களை செலுத்துவதற்கு பணிப்பாளர் சபைக்கு அதிகாரம் சாட்டப்பட்டுள்ளது. | பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | நடைமுறையல்லா சொத்துக்களுக்காக பயன்படு ஆயுட்காலம் வருடாந்த மீளாய்வு செய்யப்படாத காரணத்தினால் மேல் மாகாண பொருளதார அபிவிருத்திப் பணியகத்தின் ரூபா 7,267,401 பெறுமதியான நிலையான சொத்துக்கள் முழுமையாக தேய்விடப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது. | 2022 ஆம் ஆண்டில் அனைத்து சொத்துக்களையும் மீள் மதிப்பீடு செய்து நிறைவு செய்ய வேண்டுமென்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் முழுமையாக தேய்விடப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ள சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.5.2 மேல் மாகாண சுற்றுலா சபை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் தலைவரிடமிருந்து ரூபா 7,910,000 ஆன தொகையை அறவிட்டமை தொடர்பில் நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த ஏற்றுக் கால கடலோர பூங்காவுடன் தொடர்புடைய வழக்கு தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சுற்றுலா சபை நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். | நிறுவனத்திற்கு எதிராக உள்ள வழக்குகள் தொடர்பிலான தகவல்கள் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | சபையின் சுற்றுலா மேம்படுத்தல் பணிகளுக்காக சிறிய ஒலிப்பதிவு நாடா ஒன்றினை நிர்மாணிப்பதற்கு 2018 திசெம்பர் 31 ஆந் திகதி மேல் மாகாண, | உலகளாவிய சுற்றுலா மேம்படுத்தலுக்கு இணங்க இதுவரையிலும் இறுவட்டுக்களின் பணிகள் இடம்பெற்றவாறு உள்ளன. | அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு கிடைத்த பணத்தை தாமதிக்காது அப்பணியில் ஈடுபடுத்த |

| | | |
|---|---|---|
| உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து ரூபா 1,636,445 தொகை கிடைத்திருந்ததுடன் 2022 ஏப்ரல் மாதம் வரையிலும் அந்த இறுவட்டு நிர்மாணிக்கப்பட்டிருக்க வில்லை. அத்தொகை 2018 ஆம் ஆண்டு முதல் செலுத்த வேண்டிய செலவினமொன்றாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மாகாண சபை அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு கிடைத்த இந்த பணம் குறித்த செயற்திட்டத்தில் ஈடுபடுத்தப்படாது 03 வருடங்களாக குறைப்பயன்பாட்டுடன் வங்கி நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | | வேண்டும். |

**1.5.6 தலைப்பு 105 – சுகாதார, சுதேச மருத்துவ, சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள், மகளிர் விவகார மற்றும் சபை அலுவல்கள் அமைச்சு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் பயன்பாட்டிற்காக 2017 யூன் 30 ஆந் திகதி முதல் வாடகை அடிப்படையில் 02 வாகனங்களை பெற்று மீளாய்வாண்டினுள் வாகன வாடகையாக ரூபா 4,263,840 செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறுள்ள போது அமைச்சிற்கு சொந்தமான ரூபா 34,985,000 பெறுமதியான லான்ட் றோவர் ரகத்திலான டிஸ்கவரி ஜீப் வண்டியொன்று 2021 ஆகஸ்ட் 06 ஆந் திகதி முதல் வெளிவாரி தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிறுவனத்தின் வளங்களை உச்ச விளைதிறனுடனும் செயற்திறனாகவும் நிறுவனத்தின் நோக்கங்களுக்காக மாத்திரம் ஈடுபடுத்த வேண்டியதுடன் ஏனைய வெளிவாரி தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்களை துரிதமாக மீளப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.7 தலைப்பு 106 - விவசாய, காணி, நீர்ப்பாசன, மீன்பிடி, விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரம் மற்றும் விவசாய அபிவிருத்தி அமைச்சு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மேல் மாகாண விவசாய அமைச்சின் கீழ் டின்களில் அடைக்கப்பட்ட மீன் செயற்திட்டமொன்றுக்காக தேவையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ரூபா 19,420,194 செலவிடப்பட்டிருந்ததுடன் டின்களில் அடைக்கப்பட்ட மீன்கள் செயற்திட்டத்திற்குரிய கைத்தொழிற்சாலைகளை நிர்மாணிக்கும் பணிகள் மீளாய்வாண்டின் இறுதியில் நிறைவு செய்யப்பட்டிராத காரணத்தினால் அந்த இயந்திரம் மற்றும் உபகரணங்கள் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டன. | 2022 ஆம் ஆண்டில் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | 2020 திசெம்பர் மாதம் முதல் குறைப் பயன்பாட்டுடன் நிலவும் இச்சொத்துக்களை துரிதமாக குறித்த பணிகளுக்காக பயன்படுத்த வேண்டும். |

**1.5.7.1 விவசாய சேவைகள் அதிகாரசபை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உணவகம் மற்றும் 02 விற்பனை நிலையங்கள் முறையே ரூபா 461,870, ரூபா 4,073,481 மற்றும் ரூபா 3,344,099 ஆன இறுதி இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாமை உள்ளடங்கலாக கூட்டுப் பெறுமதி ரூபா 27,936,701 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வு செய்வதற்கு எழுத்து மூல சான்றுகளை சமர்ப்பிக்காமை மற்றும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிறைவடைந்த ஆண்டிற்கான கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கு பேரேடொன்று பேணப்பட்டிராமை போன்ற முக்கியமான அவதானிப்புக்கள் காரணமாக அதிகார சபையின் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றக்கள் தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராயத்தினை மறுதலிப்பதற்கு நேர்ந்திருந்தது. | இறுதி இருப்பு மெய்மையாய்வு செய்வதற்கும் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கும் பேரேடொன்றினை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கு பேரேடொன்று பேணப்பட வேண்டும். |

**1.5.8 தலைப்பு 107 – வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்தல், வீடமைப்பு மற்றும் நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு**

**1.5.8.1 மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலுமான பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட வீதி அபிவிருத்தி மற்றும் ஏனைய நிர்மாணங்களுக்குரிய அதிகார சபையிலிருந்து பெற வேண்டிய ரூபா 4,739,664,970 ஆன தொகையில் 2022 ஆகஸ்ட் 22 ஆந் திகதி வரையிலும் 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் தொடர்ந்தும் பொது திறைசேரியிலிருந்து ரூபா 2,145,797 பெற வேண்டியதாக காணப்பட்டது. | நீதிமன்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கு உரிய அங்கீகாரங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபைக்கு சாட்டப்பட்டுள்ள ஆரம்ப ஒப்படைப்பு பெறுமதியில்லாத 1,698.3 பேர்ச் பரப்பளவுள்ள 17 காணித் துண்டுகள் அதிகார சபையினால் ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அதனால் அத்துமீறிய குடியிருப்பாளர்களின் பயன்பாட்டிற்கு உள்ளாக்கப்பட்டிருந்த 1,173.1 பேர்ச் பரப்பளவான 12 காணித் துண்டுகள் தொடர்பில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அத்துமீறிய குடியிருப்பாளர்களுக்கு தேவையான காணிகளை வழங்கி எஞ்சிய காணிகளை அதிகார சபைக்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காணித் துண்டுகளை தீர்ப்பனவு செய்த பின்னர் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சுமார் 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தொலைந்து போயிருந்த 06 வாகனங்கள் தொடர்பில் விசாரணை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு அவ்வாகனங்களை மீண்டும் மாகாண சபைக்கு பெற்றுக் கொள்வதற்கு போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குழுவொன்றினை நியமித்து அறிக்கையினை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | விசாரணை நடவடிக்கைகளை துரிதமாக நிறைவு செய்து சொத்துக்களை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ரூபா 17,577,120 தொகையான அஸ்பிளட் 1,204.20 தொன்கள் கடன் அடிப்படையில் அதிகார சபைக்கு உரித்தற்ற வீதிகளை நிர்மாணிப்பதற்கு முறையான அங்கீகாரமின்றி ஒப்பந்தக்காரரொருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. அவற்றுள் ரூபா 9,533,413 ஆன தொகையை அறவிடுவதற்கு 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் தொடர்ச்சியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இத்தொகையை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளன. | அறவிடப்பட வேண்டிய பணத்தினை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.8.2 மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையினால் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக சராசரி பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் 5,813 விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றுள் 5,584 எண்ணிக்கையான அனுமதிப்பத்திரங்கள் கேள்வி நடைமுறையை பின்பற்றாது வழங்கப்பட்டிருந்தது. | 2007 ஆம் ஆண்டிற்கு முன்னர் வழங்கப்பட்டுள்ள பேருந்துகளுக்கு கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்டிருக்க வில்லை. | கேள்வி நடைமுறையை பின்பற்றி பயணிகள் சேவை அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 1996 மார்ச் மாதம் 27 ஆந் திகதிய அமைச்சரவை அனுமதிப்பத்திர இலக்கம் 96/0552/118/033 இலக்கமுடைய மேல் | ஒப்படைப்புச் சான்றிதழ் அல்லது ஆவணமொன்று வழங்குமாறு கோரி பிரதேச செயலகங்களுக்கு கடிதங்கள் | பேருந்து நிலையங்களின் சட்ட உரித்தினை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | மாகாண சபையின் 18 பேரூந்து நிலையங்களை சாட்டப்பட்டிருந்த போதிலும் 2022 மார்ச் 09 ஆந் திகதி வரையிலும் அவற்றின் சட்ட உரித்து அதிகார சபைக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுப்பப்பட்டுள்ளன. | வேண்டும். |
| (இ) | அதிகார சபைக்கு தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் கணனி வலையமைப்பொன்றை நிறுவுதல் திட்டமிடுவதற்காக 2006 ஆம் ஆண்டு முதல் ஒரு வருட காலத்திற்கு கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கைகள் நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்ததுடன் கணனி உபகரணங்கள் மற்றும் மென்பொருளுக்காக அதிகார சபையினால் 2006 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் ரூபா 2,254,916 செலவிடப்பட்டிருந்த போதிலும் கணனி வலையமைப்பு 2022 யூன் 15 ஆந் திகதி வரையிலும் செயற்படு நிலைமையில் காணப்படாததுடன் செலவிடப்பட்டிருந்த மொத்தப் பணம் நடைமுறை வேலையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. குழுவின் பரிந்துரைகள் கிடைத்த பின்னர் அதற்கமைய நடவடிக்கை எடுக்கின்றேன். | கணனி கட்டமைப்பினை துரிதமாக நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டில் ரூபா 2,750,000 செலவிடப்பட்டு முச்சக்கர வண்டி பதிவுக்காக கொள்வனவு செய்யப்பட்ட 50,000 எண்ணிக்கையான அடையாள அட்டை கொள்கலன்கள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எதுவித பயன்பாடும் இன்றி அதிகார சபையின் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன. | இந்த இருப்பு மீதியை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | தேவைக்கேற்ப சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.9 தலைப்பு 108 - கல்வி, கலாச்சார மற்றும் கலை அலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு**

**1.5.9.1 அழகியற் கலையரங்க கட்டுப்பாட்டு அதிகாரசபை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையில் உள்ள மேல் மாகாண வீதி அமைச்சு மற்றும் உள்ளுராட்சி அமைச்சுக்கு சொந்தமான ரூபா 5,350,000 பெறுமதியான டபள்கெப் இயந்திரம் மற்றும் முச்சக்கர வண்டியின் உரித்தினை அதிகார சபைக்கு சுவீகரித்திராததுடன் அந்த இரு வாகனங்களின் பெறுமதியினை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கு வைத்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 2,140,000 இந்த வாகனங்களுக்கான பெறுமானத்தேய்வு ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வாகனங்களின் உரித்தினை அதிகார சபைக்கு சுவீகரிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றவாறு உள்ளன. | நிலையான சொத்துக்களாக கணக்கு வைக்கப்பட்டுள்ள இரு வாகனங்களின் உரித்தினையும் அதிகாரசபைக்கு சுவீகரிக்க வேண்டும். |

**1.5.10 தலைப்பு 109 – பிரதம செயலாளர் அலுவலகம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் 1.1.7 ஆம் பிரிவு மற்றும் 2019 யூன் 27 ஆந் திகதிய 05/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03(அ) பிரிவிற்கமைய உத்தியோகத்தர் ஒருவர் இடமாற்றம் பெற்று வந்து 02 மாதங்கள் கடந்த பின்னர் அல்லது உத்தியோகத்தர் ஒருவர் இடமாற்றம் பெற்றுச் சென்று 03 மாதங்கள் கடந்த பின்னர் திணைக்களங்களுக்கிடையே தீர்ப்பனவு செய்யப்படாத கடன் மீதிகள் காணப்படாதவாறு செயற்பட வேண்டியதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் | உள்ளுராட்சி நிறுவனங்களுக்கு இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை மாதாந்த தவணைகளாக தீர்ப்பதனால் இவ்வாறு தீர்க்கப்படாத கடன் மீதிகள் காணப்படுகின்றன. | சுற்றறிக்கைக்கு அமைய செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சு / திணைக்களங்கள் உள்ளடங்கலாக 27 நிறுவனங்களின் அவ்வாறான தீர்ப்பனவு செய்யப்படாத ரூபா 212,864,069 ஆன கடன் மீதி நிலவியது. | | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.2.2, 4.2.3, 4.5, 4.6 மற்றும் 6.3 ஆம் பிரிவுகளுக்கமைய அமைச்சு அல்லது திணைக்களங்கள் உள்ளடங்கலாக 19 நிறுவனங்களின் மரணமடைந்த மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள் அல்லது ஊழியர்களின் ரூபா 51,891,920 ஆன கடன் மீதியை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மரணமடைந்த மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் மிகையூதியத்திலிருந்து அறவிடுவதற்கு ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளதுடன் ஓய்வூதிய உரித்தற்ற மரணமடைந்த உத்தியோகத்தர்களின் உரிய பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளன. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2019 யூன் 27 ஆந் திகதிய 05/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03(உ) பந்திக்கமைய அமைச்சு மற்றும் திணைக்களங்கள் உள்ளடங்கலாக 18 நிறுவனங்களில் சேவையை விட்டுச் சென்ற, பணி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதா என்பதை ஆராய்ந்து அல்லது சொத்துக்கள் தொடர்பில் உறுதிப்பாடொன்றினை பெற்றுக் கொண்ட பின்னர் சட்டமா அதிபர் மூலம் ரூபா 16,230,046 ஆன கடன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணம் அறவிடும் நடவடிக்கைகள் இடம்பெற்றவாறு உள்ளன. | சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மூவரால் அந்தந்த நிறுவனங்களின் வருமானக் குறியீடுகள் 05 | முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் புத்தகங்களிலிருந்து | சட்டத்தின் மூலமாகவோ அல்லது ஏனைய வழிகளிலோ |

| | | | |
|---|---|---|---|
| | இன் கீழ் அறவிட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 25,470,014 ஆன வருமானங்கள் மீளாய்வாண்டினுள் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. | பதிவழிக்கப்பட்டுள்ளது. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு முடியாது என்பது உறுதிப்படும் கடன் மீதிகள் மாத்திரம் பதிவழிக்கப்படல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் 30 வருமானக் குறியீடுகளின் கீழ் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அவற்றுள் 12 வருமானக் குறியீடுகளுக்குரிய ரூபா 1,451,163,415 ஆன நிலுவை வருமானமொன்று காணப்பட்டது. | நிலுவை வருமானம் அறவிடப்பட்டவாறு உள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக வைப்புச் செய்து 02 வருடங்களை விஞ்சிய போதிலும் அகற்றப்படாத 04 திணைக்களங்களின் மற்றும் 03 பிரதேச செயலகங்களினதும் (மாகாண சபை நிதியேற்பாடு) ரூபா 57,648,192 கூட்டுத்தொகையான 280 வைப்பு மீதிகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்பனவு செய்யப்படாத வைப்புக் கணக்கு மீதிகள் 2022 ஆம் ஆண்டினுள் தீர்ப்பனவு செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | மேல் மாகாண சபைக்காக மத்திய அரசிலிருந்து செலவின மதிப்பீட்டின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த நிதியேற்பாடு (குறைநிரப்பு ஒதுக்கீடு உள்ளடங்கலாக) ரூபா 50,685 மில்லியனாக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 48,909 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | குறித்த வருடத்தின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது மாகாண சபையின் அனைத்து செலவினங்களுக்காகவும் பணம் ஈடுபடுத்தும் போது அதற்குரிய நிதி வழிகளை ஒழுங்கமைக்கும் போது மத்திய அரசிலிருந்து வழங்கப்படும் அந்த காசுப்பாய்ச்சல்களும் உத்தேச மானியங்களாக கருதப்பட்டது. | மத்திய அரசினால் வழங்கப்பட்டிருந்த மொத்த நிதியேற்பாட்டினையும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | தலைப்பு 312 இன் ஊடாக மூலதன செலவினங்களுக்கான | 2020 ஆம் ஆண்டில் எஞ்சியிருந்த ரூபா 29,350,000 ஆன தொகை | குறித்த ஆண்டில் கிடைக்கும் பணத்தில் அந்த |

| | | | |
|---|---|---|---|
| | கட்டுநிதியாக ரூபா 1,410,855,000 கிடைத்திருந்த போதிலும் அதற்காக மாகாண சபை நிதியக் கணக்கிலிருந்து ரூபா 1,594,770,000 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை யின் அடிப்படையில் கட்டுநிதியினை விஞ்சி ரூபா 183,915,000 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் மேற்படி செலவின விடயத்தின் செலவினங்களை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்பட்டது. | வருடத்தின் செலவினங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஐ) | 02 மூலதன செலவின விடயங்களுக்காக ஆண்டினுள் கிடைத்திருந்த ரூபா 173,350,000 செலவினம் மேற்கொள்ளப்படாத காரணத்தினால் மீளாய்வாண்டின் இறுதியில் மேல் மாகாண சபை நிதியத்திற்குரிய வங்கி நடைமுறைக் கணக்குகளில் செயலற்ற காசு மீதியொன்று நிலவியதுடன் மத்திய அரசின் எதிர்பார்த்த மூலதன நிகழ்ச்சித் திட்டங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | மேல் மாகாண சபைக்கு திரவத்தன்மை மிக்க பணமாக கிடைத்துள்ள தொகையில் எஞ்சியிருந்தது ரூபா 6,400,000 மாத்திரம் என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். | மூலதன செலவின விடயங்களின் கீழ் கிடைக்கும் அனைத்து பணமும் குறித்த பணிகளுக்காக செலவிடப்பட வேண்டும். |
| (ஒ) | 2014 ஆம் ஆண்டில் மஹர பிரதேச செயலகத்தில் காப்பறையில் காணப்பட்டு காணாமல் போன ரூபா 10,082,245 ஆன தொகையில் மாகாண சபை நிதியத்திற்குச் சொந்தமான ரூபா 915,786 ஆன தொகைக்குரிய திணைக்கள விசாரணைகள் நிறைவடைந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த பணம் பொறுப்புக் கூற வேண்டியவர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணாமல் போன ரூபா 10,082,245 தொகை தொடர்பில் நி.பி 104(1) மீளாய்வு அறிக்கையில் பரிந்துரைக்கமைய உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை. | மாகாண நிதியத்திற்குரிய தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.11 தலைப்பு 110 – பொறியியல் பணியகம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 28 ஆந் | எதிர்காலத்தில் மாகாண | சொத்துக்களுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | திகதிய 14/2021 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் 2.5.14.1 ஆம் பிரிவின் பிரகாரம் அனைத்து கணக்கீட்டு உத்தியோகத்தர்களும் நிதி நிலைமைக் கூற்றுக்கு உள்ளடக்கப்படும் அனைத்து சொத்துக்களுக்காகவும் விரிவான பொருட்கள் தொடர்பான பட்டியலை பேண வேண்டிய போதிலும் மாகாண பொறியியல் பணியகத்தினால் ரூபா 13,359,026,634 பெறுமதியான சொத்துக்களுக்குரிய பட்டியல்கள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | திறைசேரியின் அறிவுரைகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | தனிப்பட்ட பட்டியல்களை பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மேல் மாகாண பொறியியல் பணியகத்தினால் பதிவேட்டு முகாமைத்துவ கட்டமைப்பினை ஒழுங்கமைத்தல் மற்றும் நடைமுறைகளை தன்னியக்க கட்டமைப்பொன்றினை தயாரிப்பதற்கு 2018 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலும் ரூபா 13,917,715 மேல் மாகாண தகவல் தொழில்நுட்ப வழங்கல் அபிவிருத்தி நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கிருந்த இந்த பதிவேட்டு முகாமைத்துவ கட்டமைப்பினை நிறுவுதல் 2022 யூன் 30 வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆவண முகாமைத்துவ கட்டமைப்பின் ஒரு பகுதிக்குரிய ஒப்பந்தத்திற்கமைய ஆவணங்களை ஸ்கான் செய்யும் நடவடிக்கைகளில் சுமார் 90 சதவீதத்திற்கு அண்மிய அளவு மீளாய்வாண்டின் இறுதியில் கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | பதிவேட்டு முகாமைத்துவ கட்டமைப்பினை துரிதமாக நிறுவி உத்தேச நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.12 தலைப்பு 111 – வருமானத் திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மேல் மாகாண வருமானத் திணைக்களத்தின் மகரகம பிரதி வருமான ஆணையாளர் அலுவலகம் அமைந்துள்ள கட்டிடத்தில் பொருத்தப்பட்டிருந்த 13 வளிச்சீராக்கி | வளிச்சீராக்கல் இயந்திரங்கள் தொடர்பில் தொழில்நுட்ப அறிக்கையொன்று பெற்றுக் கொண்டு | சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| இயந்திரங்கள் 2020 ஆகஸ்ட் 20 ஆந் திகதி புதிய கட்டிடத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவற்றை பயன்படுத்தாது காணப்பட்டதுடன் அவை தேவையற்றிருப்பின் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. | |

**1.5.13 தலைப்பு 112 – உள்ளுராட்சித் திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உள்ளுராட்சி திணைக்களத்தின் விசாரணை நடவடிக்கைகளுக்கு உரிய உதவிப் பணிப்பாளர் ஒருவர் உள்ளடங்கலாக 53 விசாரணை உத்தியோகத்தர்கள் இணைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலும் திணைக்களத்தின் விசாரணை பிரிவிற்கு கிடைத்திருந்த மொத்த மக்கள் முறைப்பாடுகளின் எண்ணிக்கையான 2,842 இல் 1,222 முறைப்பாடுகள் அதாவது 43 சதவீதமானவை 2022 ஏப்ரல் மாதம் வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | பதவிகளின் வெற்றிடங்கள் நிலவுகின்றமை. | மக்கள் முறைப்பாடுகளை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) மேல் மாகாண உள்ளுராட்சி ஆணையாளர் செயற்திட்ட உத்தியோகத்தரான ஹொரண மாவக்ஓயா வசதிகள் நிலையத்தின் மற்றும் ஹெலபோஜுன்ஹல நிர்மாணிப்பு செயற்திட்டத்தின் கட்டம் - 3 இற்காக ரூபா 3,000,000 செலவிடப்பட்டு 2020 ஆம் ஆண்டில் செயற்திட்டத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும் 02 வருடங்களுக்கு அண்மிய காலத்தினுள் ஹெலபோயுன்கல இன் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிக்காமையால் | சுத்திகரிப்பு வசதிகளுக்காக நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கங்களை துரிதமாக நிறைவேவற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேறியிருக்கவில்லை. | | |
| (இ) | மேல் மாகாண சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 49 உள்ளூராட்சி அதிகார சபைகள் 2022 யூன் 30 ஆந் திகதி வரையிலும் ரூபா 7,331,742,054 ஆன நிலுவை வருமானத்தை கொண்டிருந்தன. | அறவிடப்பட்டவாறு உள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | நீர்கொழும்பு மாநகர சபையின் உத்தியோகத்தர்களுக்கு எதிராக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் விதிக்கப்பட்ட 02 மிகை அறவீடுகளுக்குரியதாக அறவிடப்பட வேண்டிய ரூபா 2,325,780 பெறுமதி 2021 திசெம்பர் 31 ஆந் திகதியிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறித்த பணிகள் இடம்பெற்றவாறு உள்ளது. | மிகையறவீடுகள் தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | அகலவத்த பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கக்குலந்தல பகல் நேர பராமரிப்பு நிலையத்தில் நிர்மாணிப்பதற்காக மேல் மாகாண அபிவிருத்தி மானியங்களின் கீழ் செலவிடப்பட்ட மொத்த தொகை ரூபா 6,889,483 ஆகக் காணப்பட்டதுடன் இக்கட்டிடம் 2020 நவம்பர் மாதத்தில் பணிகளை பூர்த்தி செய்திருந்த போதிலும் 02 வருடங்களுக்கு அண்மிய காலம் கடந்துள்ள போதிலும் கட்டிடத்தினை எதிர்பார்த்த பணிகளுக்கு பயன்படுத்தியிருக்கவில்லை. | தேவையான உபகரணங்கள் மற்றும் ஏனைய வசதிகளை நிறைவு செய்து செயற்படு நிலைமைக்கு உள்ளாக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | கட்டிடத்தினை எதிர்பார்த்த பணிகளுக்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.14 தலைப்பு 113 – சுகாதார சேவைகள் திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கமைய அரச | 2022 ஆம் ஆண்டில் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனங்களில் கைதவிர்க்கப்பட வேண்டிய பொருட்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் மீரிகம ஆதார மருத்துவமனையில் 2020 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்ட பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத 55 வகையான பொருட்களுக்குரிய 221 உருப்படிகள் 2022 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மாகாண நிதி விதி 41.1.(ஆ) மற்றும் 91.1.6 ஏற்பாடுகளுக்கமைய கட்டணங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் வருமானத்தை அதிகரிப்பதற்கான இயலுமையை ஆராய்தல் மற்றும் வழங்கல் மற்றும் சேவைகளுக்காக அறவிடுதல்கள் கட்டணங்கள் ஆகியவற்றில் நிலவும் பொருளாதார மற்றும் ஏனைய நிலைமைகள் தொடர்பில் கருத்திற் கொண்டு காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து மாற்றியமைக்கப்பட வேண்டிய போதிலும் மருத்துவ சான்றிதழ்களை வழங்கும் கட்டண வருமானம் 2009 யூன் 11 ஆந் திகதி திருத்தப்பட்டதன் பின்னர் 12 வருட காலம் கடந்திருந்த போதிலும் திருத்தியமைப்பதற்கு சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களுடன் இணங்குவதாக தெரிவித்துக் கொள்கின்றேன். | மாகாண நிதி விதிக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ரூபா 115,988,935 ஆன கட்டு நிதி மீதி 2022 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் மேல் மாகாண திறைசேரிக்கு தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | தீர்க்கப்படாத கட்டுநிதி மீதியை இயலுமான அளவில் தீர்த்து நிறைவு செய்யுமாறு சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | தீர்க்கப்படாத கட்டுநிதி மீதிகளை தாமதிக்காது தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ரூபா 21,801,469 அனுப்பப்பட்ட மீதி 2022 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் மேல் மாகாண திறைசேரிக்கு தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அனுப்பப்பட்ட மீதியை இயலுமான அளவில் துரிதமாக தீர்த்து நிறைவு செய்யுமாறு சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | அனுப்பப்பட்ட மீதியை தாமதிக்காது இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | களுத்துறை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய மருத்துமனைகளுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள வெளிநாட்டு விடுமுறை பெற்றுக் கொண்ட இரு மருத்துவர்களின் வெளிநாட்டு விடுமுறைகள் நிறைவடைந்திருந்த போதிலும் சேவைக்கு அறிக்கையிட்டிராததுடன் தாபன விதிக் கோவையின் XII அத்தியாயத்தின் 16.5 பிரிவு மற்றும் கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கைக்கு அமைய அறவிடப்பட வேண்டிய ரூபா 2,648,387 கூட்டுத்தொகையான பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கை அலுவலகத்திற்கு கிடைத்துள்ளது எனவும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துக் கொள்கின்றேன். | உடன்படிக்கைக்கு அமைய அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | ஹொரண ஆதார வைத்தியசாலையின் 2021 ஆம் ஆண்டின் சுத்திகரிப்பு சேவைகளை பேணுவதுடன் தொடர்புடையதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையில் மாதாந்தம் ரூபா 3,534,764 ஆன தொகைக்கு ஒப்பந்தத்தினை பெற்றுக்கொண்ட ஒப்பந்தக் காரரினால் உடன்படிக்கைக்கு அமைய சேவையில் ஈடுபடுத்தப்படும் நபர்கள் தொடர்பிலான தகவல்கள் மருத்துவமனைக்கு உரிய முறையில் வழங்கப்படாமை, ஒரே சேவையில் ஒரே தரப்பினர் தொடர்ச்சியாக சேவையில் ஈடுபடுத்தப்படாமை, பெரும்பாலான நாட்களில் சுத்திகரிப்பு பணிகள் உரிய முறையில் இடம்பெறாமை, 38 | நிரந்தர பதவியணியில் உள்ளவர்கள் சுகயீனம் அடைந்த போது அதற்கு பதிலாக தற்காலிகமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஊழியர்கள் மாற்றப்படும் போது ஹொரன மருத்துவமனையில் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | சுத்திகரிப்பு நடவடிக்கைகள் மருத்துவமனை உத்தியோகத்தர் களின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | - 40 இற்கு இடைப்பட்ட எண்ணிக்கைக்கு இடையிலான ஊழியர்கள் சுத்திகரிப்பு சேவையில் ஈடுபடுத்தப்படுவதாக வருகை பதிவேடுகளின் பிரகாரம் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட திகதியில் 33 ஊழியர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையின் அடிப்படையில் மருத்துவமனை உத்தியோகத்தர்களினால் சுத்திகரிப்பு நடவடிக்கை தொடர்பில் முறையான கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது. | | |
| (எ) | | | |
| (i) | ஹொரண சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகத்தின் விசர்நாய்க் கடி தடுப்பூசி ஏற்றும் நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அங்கீகாரத்தினை பெற்று ஆரம்பிக்கப்பட்டிராததுடன் 2021 ஆம் ஆண்டின் தடுப்பூசி ஏற்றுவதற்காக கிடைத்த 4,000 தடுப்பூசிகளின் பயன்பாடு தொடர்பில் முறையான பதிவேடுகள் பேணப்பட்டிருக்க வில்லை. | தற்போது நிர்வாக பொது சுகாதார பரிசோதகரால் பொறுப்பேற்கப்பட்டு பூட்டு போடப்பட்டு குளிர்சாதனப் பெட்டியில் களஞ்சியப்படுத்தி தமது கண்காணிப்பின் கீழ் தடுப்பூசி ஏற்றுபவர்களுக்கு தேவையான தடுப்பூசிகளை வழங்குவதற்கும் மீளப் பெற்றுக் கொள்ளலும் இடம்பெறுகின்றது. தடுப்பூசிகளுக்கு பதிவேடொன்றினை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தடுப்பூசி ஏற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்குரிய தடுப்பூசிகள் தொடர்பான தகவல்கள் உரிய முறையில் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ii) | 2020 சனவரி முதல் 2021 மார்ச் வரையிலும் ஹொரன சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்தின் தடுப்பூசி ஏற்றியவர்களின் அறிக்கைக்கமைய 6,765 தடுப்பூசி ஏற்றல்கள் இடம்பெற்றுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளதாக மாவட்ட விசர்நாய் கடிப்பிரிவு அறிக்கைக்கமைய அது 12,193 ஆக பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் | கொவிட் 19 தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் தனிமைப்படுத்தல் கடமைகளில் முன்னுரிமை வழங்கிய காரணத்தினால் பதிவேட்டிற்கு உட்படுத்துதல் தாமதமடைந்தமை. | தடுப்பூசி ஏற்றல் அறிக்கைகள் நாளாந்தம் நாளதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நாரஹேன்பிட்டியவில் அமைந்துள்ள பொது சுகாதார கால்நடை மருத்துவ சேவைகள் பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ள அறிக்கைக்கமைய அந்த எண்ணிக்கையானது 9,074 ஆகவும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட எண்ணிக்கைகள் குறிப்பிடப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | மருந்து வகைகளின் தரமிழந்துள்ள (Quality fail) காணப்பட்டமையால் நோயாளர்களுக்கு வழங்குவதற்கு பொருத்தமற்றதாக உறுதிப்படுத்தப்பட்டமையால் அந்த மருந்துகளை நோயாளிகளுக்கு பகிர்ந்தளிப்பமை நிறுத்துமாறு மத்திய அரசின் மருத்துவ வழங்கல் பிரிவினால் 2021 ஆம் ஆண்டில் 96 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அறிவித்திருந்தது. அதற்கமைய அறிவிப்பு மேற்கொள்ளப்பட்ட போதும் ரூபா 2,395,212 பெறுமதியான 27 வகைகளுக்குரிய தரமிழந்த மருந்துகள், 473,341 அலகுகளின் மருந்துகள் களுத்துறை மாவட்டத்தின் மருத்துவமனைகள் மற்றும் சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. சுற்றறிக்கைவெளியிடப்பட்டதன் பின்னர் ரூபா 1,451,106 பெறுமதியான 282,088 அலகு மருந்துகள் மருத்துமனைகளிலிருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும் அதுவரையிலும் ரூபா 944,106 பெறுமதியான தரமிழந்த 189,155 அலகுகள் நோயாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. | பிரதேச மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைக்கும் மருந்துகளை உடனடியாக மருத்துவமனைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிப்பதால் தரமிழந்த மருந்துகள் சுற்றறிக்கைகள் மூலம் அறிவிக்கும் போது பெரும்பாலான மருந்துகள் விநியோகிக்கப்பட்டிருந்தன. | தரமிழந்த மருந்துகளை நோயாளர்களுக்கு வழங்கப்படுவதனை நிறுத்துவதற்கு முறையான வேலைத் திட்டமொன்று அறிமுகப்படுத்த வேண்டும். |
| (ஐ) | நன்கொடையாக கிடைத்திருந்த மீரிகம | மருத்துவமனை வளாகத்தினை | மருத்துவமனை வளாகத்தின் |

| | | | |
|---|---|---|---|
| | மருத்துவமனை வளாகத்தில் அடிப்படை வசதிகளுக்கமைய 6.4 ஹெக்டயர்கள் பரப்பளவுடையதாக காணப்பட்ட போதிலும் அக்காணியின் உரித்தினை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முறையாக சுவீகரித்திருக்கவில்லை. | சுவீகரிப்பதற்கு நில அளவையாளர் திணைக்களத்திற்கு அளவீட்டு கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளன. | உரித்தினை சுவீகரிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஒ) | 2020 ஆம் ஆண்டில் ரூபா 3,300,000 பெறுமதியான Auto mated Blood Culture System இயந்திரமொன்று ஹொரன ஆதார வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டு அதன் பணிகளுக்காக மூன்று உத்தியோகத்தர்கள் பயிற்றுவிக்கப்பட்டிருந்த போதிலும் இயந்திரத்தை பயன்படுத்த விசேட மருத்துவ நிபுணர் ஒருவரை மருத்துவ மனைக்கு இணைப்புச் செய்வதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமையால் அந்த இயந்திரம் 2022 யூலை மாதம் வரை எதிர்பார்த்த பணிகளுக்கு பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. | அப்பதவிக்கு மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரை இணைப்புச் செய்தல் இடம்பெறவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | இயந்திரத்தை முழுமையாக பயன்படுத்தக் கூடிய வகையில் துரிதமான வேலைத் திட்டமொன்று ஈடுபடுத்தப்படல் வேண்டும். |
| (ஓ) | பத்துபிட்டியவல மருத்துவமனையில் ரூபா 1,955,745 பெறுமதியான 46 மருந்து வகைகளும் மீரிகம மருத்துவமனையில் ரூபா 69,945 பெறுமதியான 06 மருந்து வகைகளும் ஹொரண ஆதார வைத்தியசாலலயில் ரூபா 130,021 பெறுமதியான 14 மருந்து வகைகளுமாக 03 மருந்துவமனைகளில் ரூபா 2,155,711 பெறுமதியான 66 மருந்துவகைகளும் மீளாய்வாண்டில் காலாவதியாகியிருந்தது. காலவதியடைவதற்கு முன்னர் இந்த மருந்துகளை பயன்படுத்துவதற்கு அல்லது பயன்படுத்தக்கூடிய மருத்துவமனைகளுக்கு மாற்றும் நடைமுறையொன்றினை | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையிலான சிகிட்சைகளுக்காக மருத்துவமனைகளுக்கு வருகைதந்த நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்தது. மேலும் இந்த நிலைமை நாடு முழுவதும் அனைத்து மருத்துவமனைகளில் நிலவிய காரணத்தினால் பெரும்பாலான மருந்துகளை ஏனைய மருத்துவமனைகளுக்கு மாற்றுதல் சிரமமாக காணப்பட்டது. | காலாவதி அடைவதற்கு முன்னர் இந்த மருந்துகளை பயன்படுத்தக்கூடிய மருத்துவ மனைகளுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.5.15 தலைப்பு 118 – காணிகள் ஆணையாளர் திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2012 இல் 04 ஆம் இலக்க காணிகள் அபிவிருத்தி விஞ்ஞாபனத்தின் 4(2) உப பிரிவிற்கமைய விஞ்ஞாபனத்தில் தொடர்புடைய உப பிரிவின் பிரகாரம் அரச காணியொன்று அரசினால் பயன்படுத்தப்படுதல் தொடர்பில் மாகாண சபையின் இணக்கப்பாட்டினை வழங்கும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது மாகாண சபையின் உத்தியோகபூர்வ காலம் நிறைவடைந்துள்ளமை மற்றும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் ஒருவர் இல்லாமையினால் நடைமுறைக்கு சாத்தியமான வகையில் இதனை செய்யும் இயலுமை காணப்படவில்லை. | விஞ்ஞாபனத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.5.16 தலைப்பு 120 – கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு சொந்தமான 42 வாகனங்கள் மற்றும் 30 கட்டிடங்களின் பெறுமதிகளை மதிப்பீடு செய்து கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு செய்யும் பணிகள் இடம்பெற்றவாறு உள்ளன. | சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.17 தலைப்பு 123 – வியாபாரப் பெயர் பதிவுத் திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வியாபார பதிவு சான்றிதழினை வழங்குவதற்கான மென்பொருளொன்று 2020 யூன் 16 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் பிரதேச செயலகங்களில் மென்பொருளுக்கு தகவல்களை உள்ளீடு செய்வதற்குரிய நுழைவு வசதியினை வழங்கியிராததுடன் மேல் மாகாணத்தில் தற்போது பதிவு செய்துள்ள வியாபார நிறுவனங்கள் தொடர்பான தகவல்களும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் வியாபார பெயர்ப்பதிவு | 2022 ஆம் ஆண்டில் பிரதேச செயலகங்களுக்கு கட்டங்களாக இம்மென்பொருளினை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டவாறு உள்ளது. | கணனி மென்பொருளை துரிதமாக நிறுவுவதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். |

திணைக்களத்தினால் ரூபா 8,631,583 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த கணனி மென்பொருளிலிருந்து எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்ற முடியாதிருந்தது.

### 1.5.18 தலைப்பு 126 – கல்வித் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு முரணாக ஹொரன, களுத்துறை மற்றும் மத்துகம வலய கல்வி அலுவலகங்களினால் முறையே 1,657,900, ரூபா 1,378,994 மற்றும் ரூபா 838,102 எனுமாறு ரூபா 3,874,996 கூட்டுத்தொகை சீருடைகளை மேலதிகமாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பாடசாலைகள் மற்றும் வலய கல்வி அலுவலகங்களினால் சரியான தகவல்களை பெற்றுக் கொள்ளும் இயலுமை காணப்படும் போது அதற்கமைய நடவடிக்கை எடுக்காமையால் மீளாய்வாண்டில் ரூபா 3,874,996 ஆன மேலதிக செலவினம் மேற்கொள்ளப்பட்டிடிருந்தது. அவ்வாறே மேற்படி வலய கல்வி அலுவலகங்களில் எந்த பாடசாலையினதும் க.பொ.த. (சா.த) அல்லது க.பொ.த (உ.த) இரண்டாம் தவணைக்கு உரியதாக மாணவர்களுக்கு வகுப்பறைகளை ஒதுக்குதல் மற்றும் நேர அட்டவணையை அங்கீகரித்தல் இடம்பெற்றிராததுடன் அம்மாணவர்களுக்கும் சீருடைகளை கோரியிருந்தமை மேலதிகமாக கொள்வனவு செய்வதற்கு காரணமாக அமைந்திருந்தது. | கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக பாடசாலைகள் அவ்வவ்போது மூடப்பட்ட காரணத்தினால் சீருடைகளை பகிர்ந்தளிக்கும் சந்தர்ப்பத்தில் மாணவர்கள் பாடசாலையை விட்டுச் சென்றிருந்தமை, சட்டைத் துணிகள் ஒரு தடவையும் காற்சட்டை துணிகள் மற்றொரு தடவையும் கிடைத்த காரணத்தினால் காற்சட்டை துணிகளை பெற்றுக்கொண்ட மாணவர்கள் சட்டைத் துணிகளை வழங்கும் போது பாடசாலையிலிருந்து விலகிச் சென்றுள்ளமை. | சுற்றறிக்கைக்கு அமைய செயற்பட வேண்டும். |
| (ஆ) | விசேட சீருடைகளை பயன்படுத்தும் ஹொரன கல்வி வலயத்தின் அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலை ஒன்றினால் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு | எதிர்காலத்தில் பாடசாலை சீருடைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் போது உரிய சுற்றறிக்கைக்கமைய | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமைய விசேட சீருடைகளை கோரியிருந்த போதிலும் அது தொடர்பில் கவனம் செலுத்தாது ரூபா 1,695,287 பெறுமதியான சாதாரணமான பாடசாலைகளுக்கு வழங்கப்படும் சீருடைத் தொகுதிகள் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் வழங்குவதற்கு உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர். | நடவடிக்கை எடுக்க வேண்டுமென முறையான கண்காணிப்புடன் இது தொடர்பில் செயற்பட வேண்டுமெனவும் அனைத்து வலய பணிப்பாளர்களுக்கும் 2022 மே 17 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 2021 ஆம் ஆண்டில் இலவசமாக வழங்கப்படும் பாடசாலை புத்தகங்கள் மற்றும் ஆசிரியர் வழிகாட்டிக் கோவைகளை பகிர்ந்தளித்தல் தொடர்பில் கல்வி வெளியீட்டு ஆணையாளரினால் 2020 பெப்ரவரி 20 ஆந் திகதிய கடிதத்திற்கமைய சரியாக பாடப்புத்தகங்களை கட்டளையிடுவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ள போது அது தொடர்பில் கவனம் செலுத்தாது ஹொரன மற்றும் மத்துகம வலய கல்வி அலுவலகங்களினால் முறையே ரூபா 5,094,065 மற்றும் ரூபா 2,264,867 எனுமாறு ரூபா 7,358,932 கூட்டுப்பெறுமதியான பாடப்புத்தகங்கள் கூடுதலாக கட்டளையிடப்பட்டு வரவழைக்கப்பட்டிருந்தன. | இதன் பின்னர் பாடசாலை பாடப்புத்தகங்களை பகிர்ந்தளித்தல் தொடர்பில் செயற்படும் போது சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் உரிய கண்காணிப்புடன் செயற்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டு மேல் மாகாண கல்விப் பணிப்பாளரின் 2022 மே 17 ஆந் திகதிய கடிதத்தில் அனைத்து வலயக் கல்வி பணிப்பாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | பாடசாலை பௌதீக வளங்கள் தொடர்பில் 2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் மகரகம வித்தியாதர மகளிர் பாடசாலையுடன் இணைந்த நீலம்கர கல்லூரிக்கு 02 ஏக்கர்கள் 02 றூட் பரப்பளவான விளையாட்டு மைதானமொன்று காணப்பட்ட போதிலும் பௌதீக பரிசோதனையில் அந்த விளையாட்டு மைதானம் தனியார் விளையாட்டு சங்கமொன்றிற்கு பயன்பாட்டிற்கு இடமளிக்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. | அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கொழும்பு மாவட்ட சிரேஷ்ட அளவீட்டு உத்தியோகத்தருக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளதுடன் விளையாட்டு மைதானம் உள்ள காணி தொடர்பில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. | விளையாட்டு மைதானத்தின் உரித்தினை பாடசாலைக்கு சுவீகரிப்பதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2016 ஆம் ஆண்டில் மே.மா./கொ./கிளிப்ரன் மகளிர் மகா வித்தியாலயத்தின் காணியுடன் இணைந்ததாக தனியார் காணியொன்றில் வீடமைப்பு தொகுதியொன்றினை நிர்மாணித்தமையால் இந்த பாடசாலையின் இரு மாடிக் கட்டிடமொன்று கீழிறங்குகின்றமை மற்றும் அதிர்வுக்கு உள்ளாகி வெடிப்புக்கள் ஏற்பட்டு சேதமடைந்திருந்த போதிலும் அது தொடர்பில் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த நிறுவனம் இணங்கியவாறு வசதிகளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு 2022 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய கடிதத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. | நட்டங்கள் இடம்பெற்ற கட்டிடம் தொடர்பில் முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு, ஜயவர்த்தனபுர, ஹோமாகம மற்றும் பிலியந்த வலய கல்வி அலுவலகங்கள் 04 இன் மற்றும் கம்பஹா வலய கல்வி அலுவலகத்தின் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்த காரணத்தினால் 64 பாடசாலைகளும் களுத்துறை மாவட்டத்தின் ஹொரன, மத்துமக மற்றும் களுத்துறை கல்வி வலய அலுவலகத்திற்குரிய 41 பாடசாலைகளும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மூடப்பட்டிருந்தன. மேலும் கொழும்பு மாவட்டத்தின் 04 வலய கல்வி அலுவலகங்களின் மற்றும் கம்பஹா கல்வி வலய அலுவலகத்தின் தற்போதைய மாணவர்களின் எண்ணிக்கை 100 இனை விட குறைவான 55 பாடசாலைகள் காணப்பட்டதுடன் மத்துகம மற்றும் களுத்துறை வலயங்களில் 100 மாணவர்களை விட குறைவான 54 பாடசாலைகள் காணப்பட்டன. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | மாணவர்களின் எண்ணிக்கை குறைவான பாடசாலைகளின் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | கம்பஹா வலய கல்வி அலுவலகத்திற்குரிய 122 பாடசாலைகள் அமைந்துள்ள காணிகளை முறையாக சுவீகரித்திருக்கவில்லை. | பாடசாலைக் காணிகளை சுவீகரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளன. | காணிகளை உரிய முறையில் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | | | வேண்டும். |
| (ஏ) | மாகாண கல்வித் திணைக்களத்திற்கு சொந்தமான கொழும்பு மாவட்டத்தின் 115 உத்தியோகபூர்வ இல்லங்கள் களுத்துறை மற்றும் மத்துகம வலயங்களின் 13 உத்தியோகபூர்வ இல்லங்களும் காணப்பட்டதுடன் அவற்றுள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 66 உத்தியோகபூர்வ இல்லங்கள் மாத்திரம் குடியிருப்பதுடன் 62 உத்தியோகபூர்வ இல்லங்கள் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டன. | உத்தியோகபூர்வ இல்லங்களை கோரியிராத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | சில உத்தியோகபூர்வ இல்லங்களை பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பழுதுபார்க்க வேண்டியதாக காணப்படும் உத்தியோகபூர்வ இல்லங்கள் காணப்படின் அந்த உத்தியோகபூர்வ இல்லங்களை பழுதுபார்த்து அனைத்து உத்தியோகபூர்வ இல்லங்களை பயன்படுத்த வேண்டும். |
| (ஐ) | ஹொரன கல்வி வலய அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்ட வாகனமொன்று உரித்துடைய உத்தியோகத்தருக்கு குழாம் வாகனமொன்று வழங்கப்பட்டிருந்தது. குழாம் வாகன ஓட்டப்பதிவினை பரிசோதித்த போது அந்த வாகனமும் குறித்த உத்தியோகத்தரினால் ஒதுக்கப்பட்ட வாகனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதற்கமைய 2019 மே 31 ஆந் திகதிய 13/2008(iv) ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கு மாதமொன்றிற்கு 140 லீட்டர் எரிபொருள் உரித்துடையதாக காணப்பட்ட போதிலும் இந்த உத்தியோகத்தரினால் அந்த அளவினை விஞ்சி 2020 ஆம் ஆண்டில் 1,272 லீட்டர் எரிபொருளும் 2021 ஆம் ஆண்டில் 1,400 லீட்டர் எரிபொருளுமாக ரூபா 286,032 பெறுமதியான 2,672 லீட்டர் எரிபொருள் மேலதிகமாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | உத்தியோகத்தரின் வாகன பயன்பாடு தொடர்பில் குழுவொன்று நியமிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | இது தொடர்பில் விசாரணை ஒன்றினை நடாத்தி நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 11,649,854,163 ஆன மிகையாக இருந்ததுடன் அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் மிகை ரூபா 1,170,517,374 ஆகும். அதன் பிரகாரம் நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 10,479,336,789 ஆன முன்னேற்றமொன்று காணப்பட்டதுடன் அம்முன்னேற்றத்திற்கு வரி வருமானம் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது ரூபா 8,778,392,763 ஆல் அதிகரித்திருந்தமை மற்றும் அரசின் மீண்டெழும் மானியங்கள் பெறுவனவு ரூபா 1,511,000,000 ஆல் அதிகரித்தமையே காரணமாக இருந்தது.

## 3. பதவியணி நிர்வாகம்

### 3.1 மாகாண சபை அமைச்சு, திணைக்களங்கள் மற்றும் ஏனைய

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மேல் மாகாண அரச சேவை செயல்வழிக் கோவை மற்றும் விதிக் கோவை (XXIII) அத்தியாயத்தின் 192(I)(III)(V) ஆம் பிரிவிற்கமைய வருடாந்த இடமாற்றக் கொள்கை மற்றும் நடைமுறை தயாரிக்கப்பட்டு இடமாற்றத்தினை நடைமுறைப்படுத்த வேண்டிய போதிலும் மேல் மாகாண, சபை அலுவலகத்தின் 17 உத்தியோகத்தர்கள் 05 முதல் 30 வருடத்திற்கு இடைப்பட்ட காலமாக இடமாற்றம் பெற்றுக் கொள்ளாது ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்றியவாறு இருந்தனர். | இடமாற்றம் மேற்கொள்ளும் போது 2000 இன் 07 ஆம் இலக்க மாகாண சபை செயலக அலுவலகங்களுக்கான பதவியணி விஞ்ஞாபனத்திற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டது. | மேல் மாகாண அரச சேவைகள் செயல்வழிக் கோவை மற்றும் விதிக்கோவைக் கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மேல்மாகாண சுற்றுலா சபைக்கு 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் DMS/WP/0507 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் பதவியணி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அப்பதவியணியை ஆட்சேர்ப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி | இந்த ஆட்சேர்ப்புக்கள் தாமதமடைவதற்கு நாட்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமை தாக்கமளித்தது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | சபையின் நடவடிக்கைகளை பேணிச் செல்வதற்கு நிரந்தர பதவியணியொன்று காணப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் பதிற்கடமை,, ஒப்பந்த அடிப்படை மற்றும் தற்காலிக அடிப்படையின் கீழ் அனைத்து உத்தியோகத்தர்களும் இணைப்புச் செய்யப்பட்டிருந்தனர். | | |
| (இ) மேல் மாகாணத்தின் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பல்வேறு செயற்திட்டங்கள் மற்றும் பணிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகளுக்கு மேலதிகமாக ஆரம்ப மட்டத்திலான ஒரு ஊழியரும் அமைய அடிப்படையில் 406 ஊழியர்களும் ஒப்பந்த அடிப்படையில் 140 ஊழியர்களுமாக 546 ஊழியர்கள் அதிகார சபையில் கடமையாற்றியமையால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை விஞ்சி சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | பதவியணியை அங்கீகரித்துக் கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்ட போதிலும் அதற்கு எந்தபதிலும் கிடைத்திருக்கவில்லை. | பதவியணியை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 பாடசாலை பதவியணி**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்வேறு நோய் நிலைமைகளின் அடிப்படையில் வகுப்பறையில் கற்பிக்கும் நடைமுறையிலிருந்து விலகியுள்ள ஹொரன கல்வி வலயத்திற்குரிய 38 ஆசிரியர்களுக்கு 2021 ஆம் ஆண்டில் மாத்திரம் ரூபா 16,927,860 கூட்டுத்தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் சம்பளங்களை செலுத்துவதினால் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கோ அல்லது அந்த ஆசிரியர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கோ மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அந்த ஆசிரியர்கள் தொடர்பில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. | பல்வேறு நோய் நிலைமைகளின் கீழ் வகுப்பறைகளில் கற்பிக்கும் நடைமுறை யிலிருந்து விலகியுள்ள ஆசிரியர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 சுகாதாரப் பதவியணி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தாபன விதிக்கோவையின் III அத்தியாயத்திற்கு மற்றும் 2001 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய 18/2001 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தினை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டிய போதிலும் மீரிகம ஆதார மருத்துவமனை மற்றும் வத்துபிட்டிவல மருத்துவமனையின் 101 தாதி உத்தியோகத்தர்களும் 50 சுகாதார உத்தியோகத்தர்களும் 23 இடைநிலை பதவியணி உத்தியோகத்தர்களும் 05 முதல் 27 வருடங்கள் வரையிலான காலவீச்சில் சேவையாற்றுகின்றனர். | கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக இடமாற்றங்கள் இடம்பெறவில்லை. | சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களித்தகைமையும் நல்லாளுகையும்

### 4.1 திட்டமிடல்

**செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 13 ஆம் பந்திக்கமைய வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம், அரச நிதி திணைக்களத்தின் வழிகாட்டிக்கு அமைய தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மேல் மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தின் மீளாய்வாண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டம் அதற்கமைய தயாரிக்கப்பட்டிராததுடன் அலுவலகத்தின் ஒரு பிரிவு மாத்திரம் உள்ளடக்கப்படும் வகையில் முழுமையற்றதாக தயாரிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |